# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.

Prosecution witness for P.W. 26.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. கார்த்திகேயன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.09.2025.

A1 to 3 present.

முதல் விசாரணை

நான் தற்போது விளாத்திகுளத்தில் குடியிருந்து தமிழ்நாடு இலவச அமரர் ஊர்தி சேவையில் ஓட்டுநராக 5 ஆண்டுகளாக பணியில் இருந்து வருகிறேன். 01.04.2024 அன்று சென்னையில் எங்கள் கால்சென்டரிலிருந்து எட்டையபுரம் வட்டம், சிகேடி பள்ளி அருகில் 500 மீட்டர் துாரத்தில் ஒரு விபத்து நடந்திருப்பதாகவும், அடிபட்டவரின் பிரேதத்தை எடுத்துச் செல்ல வேண்டுமென்று எனக்கு கைபேசி மூலம் கொடுத்த தகவலின்பேரில் நான் எட்டையபுரம் காவல்நிலையத்திற்கு கைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது போலீசார் குறிப்பிட்ட இடத்தில் பிரேதம் இருப்பதாகவும், அதன் அடிப்படையில் நான் எட்டையபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து இலவச அமரர் ஊர்தி சேவை வாகனத்தை எடுத்துச் சென்று மேற்படி விபத்து நடந்த இடத்திற்கு சென்று அங்கிருந்த பிரேதத்தை நானும், போலீசாரும் வாகனத்தில் எடுத்து வைத்து நான் வாகனத்தை எட்டையபுரம் அரசு மருத்துவமனைக்கு எடுத்து வந்தேன். வாகனத்தில் போலீசாரும் உடன் வந்தார்கள். இரவு சுமார் 9 மணியளவில் நான் பிரேத்தை எடுத்து வந்தேன். இறந்துபோன நபர் ஆர்.கே. துரை என்று பிறகு தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் மேற்படி கால்சென்டருக்கு தகவல் சொல்லியிருக்கலாம். சம்பவ இடத்திலிருந்து நானும், போலீசாரும் மட்டும்தான் பிரேதத்தை எடுத்துச் சென்றோம்.

1, 3 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.09.12 17:44:27 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.

Prosecution witness for P.W. 27.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. கலா லட்சுமி. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.09.2025.

A1 to 3 present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு திருநெல்வேலி மாநகர இயங்கும் தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணியில் இருந்தபோது தூத்துக்குடி மாவட்டத்திற்கு கூடுதல் பொறுப்பில் இருந்தேன். அப்போது கடந்த 04.04.2024 அன்று திருநெல்வேலியில் நான் பணியில் இருந்தபோது எட்டையபுரம் காவல்நிலைய குற்ற எண் 85/2024 வழக்கு சம்பந்தப்பட்ட தடயங்களை சேகரிக்க வேண்டு எட்டையபுரம் காவல் ஆய்வாளர் கைபேசி மூலம் சொன்னதன் அடிப்படையில் சம்பவ இடமான எட்டையபுரம் குமாரகிரி புதுார் சிகேடி பள்ளிக்கு அருகில் சம்பவ இடத்தை பார்வையிட்டேன். காவல்நிலைய வளாகத்தில் ஒரு லாரியையும், ஒரு இருசக்கர வாகனத்தையும்பார்வையிட்டேன். சம்பவ இடத்திலிருந்து சாலையில் ஒட்டியிருந்த சிவப்பு கலர் பெயிண்ட் துகள்கள், உடைந்த இருசக்கர வாகனத்தின் மஞ்சள் நிற பெயிண்ட் ஒட்டிய பாகங்கள், இருசக்கர வாகனத்தின் கிழிந்த டேங்க் கவர், ரத்தம்பட்ட தாருடன் கூடிய கற்கள், ரத்தம்படாத தாருடன் கூடிய கற்கள் ஆகியவற்றை சேகரித்தேன்.

மேற்படி லாரியின் பதிவெண் TN 21 AK 3792 அதன் அடிப்படையில் கிரௌனிலிருந்து காய்ந்துபோன சதைத்துண்டுகள் மற்றும் ரத்தக்கறை, லாரியின் அச்சிலிருந்து எடுக்கப்பட்ட கிழிந்த பேண்ட் துணி, இடதுமுன்பக்க டயர் ரிம்மிலிருந்து ரத்தக்கறை வலைத் துணியால் துடைத்து சேகரித்தேன். அதே லாரியில் இடது முன்பக்க பம்பர் பட்டையிலிருந்து எடுக்கப்பட்ட வலை துணியினால் சேகரிக்கப்பட்ட ரத்தக்கறை எடுக்கப்பட்டது. லாரியில் பதிவெண் பலகையிலிருந்து மஞ்சள் நிற பெயிண்ட்டை சேகரித்தேன். இருசக்கர வாகனத்தில் பின் சக்கரத்திலிருந்த இடது Shock obserber –ல் இருந்து ரத்தக்கறையை வலை துணியினால் சேகரித்தேன். வலது ஹேண்டில்பாரில் இருந்த கைப்பிடியில் இருந்த ரத்தக்கறையை வலைதுணியினால் சேகரித்தான். இருசக்கர வாகனத்தில் இருந்த சிவப்பு நிற பெயிண்ட்டை சேகரித்தேன். மேற்படி அனைத்தையும் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

காவல்நிலைய வளாகத்திற்குள் நான் மேற்படி வாகனங்களை ஆய்வு செய்தேன். காவல்நிலையத்திற்குள் பல வாகனங்கள் இருந்தது என்றால் சரிதான். போலீசார் வாகனத்தை குறிப்பிட்டு காட்டி அதைத்தான் ஆய்வு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள் என்றால் சரிதான். வாகனங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளை யார் வெறும் கண்ணால் பார்த்தாலும் தெரியும் என்றால் சரிதான். மேற்படி சம்பவ இடம் என்பது வாகன போக்குவரத்து மிகுந்த சாலை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு போலீசார்தான் என்னை அழைத்துச் சென்றார்கள். போலீசார் சம்பவ இடத்தில் ஒவ்வொரு இடமாக காட்டி அந்த இடத்தில் நான் மாதிரிகளை சேகரித்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் ஆய்வாளர் இருந்தார்.

சம்பவ இடத்தில் மாதிரிகள் இருப்பதாக ஆய்வாளர் என்னிடம் சொல்லவில்லை. வாகனத்திலிருந்து மாதிரிகளை சேகரித்ததாக சொல்வது பொய் என்றும், ஆய்வாளர் சொன்னதன் அடிப்படையில் என்னால் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த மூன்று நாட்கள் கழித்துதான் நான் சம்பவ இடத்திற்கு போனேன் என்றால் சரிதான். அதனால் 3 நாட்கள் கழித்து சம்பவ இடத்திலிருந்து நான் சொல்லும் தடயங்களை சேகரிப்பதற்கான வாய்ப்பே இல்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் ஏற்பாட்டின்பேரில்தான் நான் சம்பவ இடத்தில் தடயங்களை தயாரித்ததாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும், சொன்ன இடத்திலும் எட்டையபுரம் சென்று தடயங்களை வாகனங்களிலும், சம்பவ இடத்திலும் சேகரிக்கவில்லை என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.09.12 17:44:35 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.

Prosecution witness for P.W. 28.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சிவசுப்பிரமணியம். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.09.2025.

A1 to 3 present.

முதல் விசாரணை

நான் தற்போது கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 01.04.2024 அன்று எட்டையபுரம் காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தபோது நிலைய குற்ற எண் 85/2024 விபத்து வழக்கு சம்பந்தப்பட்ட எட்டையபுரம் காவல் ஆய்வாளர் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை கண்டுபிடிக்க துப்புகிடைக்கிறதா என்று எட்டைபுரம் முதல் கோவில்பட்டி வரையில் சாலை ஓரங்களில் உள்ள அனைத்து கண்காணிப்பு கேமரா பதிவுகளையும் பார்வையிட்டு துப்பு கிடைக்கிறதா என்று தகவல் சேகரித்து வரும்படி உத்தரவு பிறப்பித்ததால் சம்பவ இடமான சிகேடி பள்ளியிலிருந்து கோவில்பட்டி நோக்கி செல்லும் சாலையில் சுமார் 500 மீட்டர் தொலைவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை பார்த்துவிட்டு கடைசியாக திட்டங்குளத்திற்கு கிழக்கே சாலைக்கு தெற்கில் உள்ள சியாமளா பெட்ரோல் நிலையத்தில் உள்ள கண்காணிப்பு கேமராவை பராமரித்து வரும் அ.சா.12 வரவழைத்து கேமரா பதிவுகளை பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதன்பேரில் அதில் பதிவாகியிருந்த

பதிவுகளை பார்க்கும்போது கேமரா 1 மற்றும் 7 ஆகியவற்றில் பதிவாகியிருந்த தலா எட்டு காணொளி காட்சிகளை பார்வையிட்டு அதில் யாரோ இரண்டு நபர்கள் விபத்தை ஏற்படுத்த வேண்டுமென்று பேசிக் கொண்டதை பார்த்து ஆய்வாளரிடம் கைபேசி மூலம் தகவல் தெரிவித்து அவரை வரவழைத்து மேற்படி காணொளி காட்சிகளை அவரும் பார்த்து அ.சா.12 இடம் நான் கொண்டு சென்ற பென்ட்ரைவில் பதிவு செய்து தரச்சொல்லி மேற்படி பதிவுகளை பதிவு செய்து வாங்கி கொண்டேன். பிறகு சிதம்பராபுரம் இந்தியன் ஆயில் பெட்ரோல் நிலையத்தில் பதிவாகியிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை பராமரித்து வரும் அ.சா.14–ஐ வரவழைத்து மேற்படி அதே பென்ட்ரைவில் அவர் மூலம் பதிவு செய்து கொண்டேன். சாட்சியிடம் மேற்படி பதிவுகள் எந்த தேதியிட்ட பதிவுகள் என்று கேட்டதற்கு முதலில் 04ம் தேதி பதிவுகள் என்று சொல்லிவிட்டு மீண்டும் 01ம் தேதி பதிவுகள் என்று மாற்றிக் கூறுகிறார். நாங்கள் 2ம் தேதி சென்று மேற்படி பதிவுகளை பதிவு செய்துகொண்டோம். சாட்சி மீண்டும் 2ம் தேதி அங்கு சென்று 1ம் தேதி பதிவுகளை பென்ட்ரைவில் பதிவு செய்து கொண்டதாக கூறுகிறார். குமாரகிரி செல்லும் வழியில் சாலையின் தென்புறமாக உள்ள கிராபியா மேட்சஸ் சென்று அங்கிருந்து கண்காணிப்பு கேமரா பதிவுகளை அதை பராமரித்து வரும் அ.சா.17 மூலம் மேற்படி அதே பென்ட்ரைவில் பதிவு செய்து கொண்டேன். பின்னர் இளம்புவனம் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள தேவர் சிலையில் இருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை அ.சா.15 மூலம் அதே பென்ட்ரைவில் பதிவு செய்து கொண்டேன். அதன் பின்னர் பாரதியார் பாலிடெக்னிக் அருகில் உள்ள அய்யன் பெட்ரோல் நிலையத்தில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை அதை பராமரித்து வரும் அருண் என்பவர் மூலமாக அதே பென்ட்ரைவில் பதிவுகளை பதிவு செய்து

கொண்டேன். மேற்படி பதிவுகளை மேற்படி பெட்ரோல் நிலையத்திலிருந்த கணினி மூலம் பதிவு செய்து கொள்ள இயலாததால் மேற்படி காட்சிகளை மானிட்டரில் ஓடவிட்டு எனது கைபேசியில் பதிவு செய்து காவல்நிலையத்தில் இருந்த லினோவோ கணினியில் கைபேசியிலிருந்து பதிவுகளை பதிவு செய்தேன். மேற்படி கணினியில் மேற்படி பென்ட்ரைவில் இருந்த காட்சிகளையும் பதிவு செய்து ஆய்வளார் வசம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். மேற்படி பதிவுகள் குறித்து நான் கொடுத்த சான்றிதழ் **அ.சா.ஆ 28**.

1, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.ஆ 28 உள்ள சங்கதிகளை யார் தட்டச்சு செய்தார்கள் என்றால் ஞாபகமில்லை. நான் தட்டச்சு செய்யவில்லை. Micro Soft Window 7 ultimate என்றால் என்ன அர்த்தம் என்றால் அது Window 7–ன் version. Window 7–ன் version என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ 28–ஐ கண்காணிப்பு கேமராவில் இருந்து பதிவு செய்ததற்கான சான்றிதழ். ஒவ்வொரு கணினியிலிருந்தும் அந்த பகுதியில் உள்ள ஆட்கள் மூலமாகத்தான் அவர்கள் உதவியுடன் பென்ட்ரைவில் பதிவு செய்தேன் என்றால் சரிதான். அவர்கள் இல்லை என்றால் என்னால் பென்ட்ரைவில் பதிவு செய்திருக்க முடியாது என்றால் சரியல்ல. என்னால் பதிவு செய்து கொள்ளமுடியும். அங்கு இருப்பவர்கள் சொல்லாமல் கண்காணிப்பு கேமரா எங்குள்ளது என்று எனக்கு தெரியாத என்றால் கண்காணிப்பு கேமரா எங்குள்ளது என்று நான் தேடித்தான் சென்றேன். மேற்படி கணினிகளை பராமரிக்கும் நபர்கள் இல்லை என்றால் என்னால் பதிவுகளை சேகரித்திருக்க முடியாது என்றால் அவர்கள் அனுமதியில்லாமல் என்னால் சேகரிக்க முடியாது. அதனால் கணினியை பராமரிக்கும் நபர்கள் பெயர் அளவுக்குத்தான் அங்கு இருக்கிறார்கள் என்றால் சரிதான். ஆய்வாளர்

விசாரணையில் ஒவ்வொரு இடத்திலும் கணினியை பராமரிக்கும் தனிப்பட்ட நபர்களின் பெயர்களை நான் சொல்லவில்லை. அதனால் ஆய்வாளர் சொல்லிக் கொடுத்து தற்போது கணினியை பராமரிக்கும் நபர்கள் என்று சில நபர்களின் பெயர்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் வாக்குமூலத்தில் ஆய்வாளர் 27.03.2023 என்று தேதியிட்டுள்ளார். அது 05.07.2024–ல் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பகுதிகளில் இருந்த கண்காணிப்பு கேமராக்களை நான் பராமரித்ததில்லை. அந்த பகுதிகளில் இருந்த கேமராக்கள் தினமும் பயன்பாட்டில் உள்ளதா இல்லையா என்பது எனக்கு தெரியாது. இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 65(பி)–ன் படி யார் யார் எல்லாம் சான்றிதழ் வழங்க வேண்டுமென்பது எனக்குத் தெரியும். நான் கணினி சம்பந்தமாக படிப்பு எதுவும் படிக்கவில்லை. எனக்கு சொந்தமாக பென்ட்ரைவ் உள்ளது. என் சொந்தமான பென்ட்ரைவில் மேற்படி பதிவுகளை நான் பதிவு செய்யவில்லை. எனக்கு சொந்தமாக கணினியில்லை. காவல்நிலையத்தில் இருந்த மடிக்கணினியை நான் பயன்படுத்தியுள்ளேன். மடிக்கணினி மற்றும் கணினி ஆகியவற்றை தேவைப்படும்போது பயன்படுத்துவேன். நான் பயன்படுத்திய கணினி நிலையத்தில் தினமும் பயன்பாட்டில் உள்ளதா இல்லையா என்பது நிலையத்தில் உள்ளவர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். அ.சா.ஆ 28 சான்றிதழை வழங்குவதற்கு நான் தகுதியான நபர் அல்ல என்றால் சரியல்ல. 02ம் தேதி காலை 7 மணியளவில் மேற்படி பதிவுகளை நான் ஆய்வாளருக்கு காட்டினேன். ஆய்வாளர் அப்போது என்னுடன் இல்லை. நான் தகவல் தெரிந்து அவரை வரச்சொன்னேன். ஆய்வாளர் கைபேசியில் எதையாவது பதிவு செய்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. கண்காணிப்பு கேமராவில் உள்ள பதிவுகளை நேரடியாக பென்ட்ரைவ் மூலம் பதிவு செய்து கொள்ளலாம். கண்காணிப்பு

கேமராவிலிருந்து நேரடியாகத்தான் மேற்படி பென்ட்ரைவில் பதிவு செய்து கொண்டேன் என்றால் சரிதான். ஆய்வாளர் தலையீட்டின்பேரில் ஆய்வாளர் ஏற்பாட்டின்பேரில் அ.சா.ஆ 28 தயாரிக்கப்பட்டு அதில் நான் கையொப்பம் மட்டும் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மறுவிசாரணை

பொதுவாக கண்காணிப்பு கேமராவிலிருந்து எந்த காட்சியையும் நேரடியாக பென்ட்ரைவில் பதிவு செய்ய முடியாது என்றும் DVR system மூலமாகத்தான் பதிவு செய்ய முடியும் என்றால் சரிதான்.

மறு குறுக்கு விசாரணை

DVR System மூலமாகத்தான் மேற்படி பதிவுகளை பென்ட்ரைவில் பதிவு செய்ததாக ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.09.12 17:44:46 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.